# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 54/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | மதம் | : |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**10.08.2024**

<u>**பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. 6வது பிரதிவாதி ராதாகிருஷ்ணன் என் அப்பா என்றால் சரிதான். என் அப்பாவிற்கும் வாதி பாபு நாயுடுக்கும் என்ன உறவு என்றால் சித்தப்பா பெரியப்பா மகன்கள் ஆவார்கள். பாபு நாயுடு அப்பா பெயர் சுப்பிரமணி நாயுடு என்றால் சரிதான். சுப்பிரமணி நாயுடு 1995ல் இறந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா. 2 ஆவணத்தில் பாப்பம்மாள், வேணுகோபால், நாகராஜ் ஆகியோரது கையெழுத்துக்கள் உள்ளது என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 பட்டாவின் பட்டா எண்.704 என்றால் சரிதான். வா.சா.ஆ 4 பட்டாவில் சுப்பிரமணி நாயுடு மனைவி பாப்பம்மாள், குமாரர்கள் வேணுகோபால், நாகராஜ், பாபு ஆகியோரது பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 பட்டாவில் உள்ள அனைவரும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 4 பட்டாவின் படி பாபு நாயுடுக்கும் தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரிதான்.

3. பட்டா எண்.704 உள்ள சொத்தின் உரிமையாளர்களான அனைத்து நபர்களும் கிரைய ஆவணத்தில் கையெழுத்து செய்யாததால் பி.வா.சா.ஆ 2

கிரைய ஆவணமே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 2002ம் ஆண்டு பி.வா.சா.ஆ 2 கிரைய ஆவணம் எழுதப்பட்ட போது நான் இளவர் என்றாலும் எனக்கு மேற்படி கிரைய விவரம் நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் முனுசாமி நாயுடு கிரையம் வாங்கியதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முனுசாமி நாயுடுவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் 23/3A 2 ஆகும். அதன் விஸ்தீரணம் 62 செண்ட் ஆகும். நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் கிழக்கே என் அப்பா ராதாகிருஷ்ணன், மேற்கே என் அப்பா ராதாகிருஷ்ணன், வடக்கே என் அப்பா ராதாகிருஷ்ணன், தெற்கே சுப்பிரமணிய நாயுடு மகன்கள் நாகராஜ், வேணுகோபால் நிலம் உள்ளது. 1967 ஆம் பி.வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் புல எண்.8/1ல் 2.67 ஏக்கர் , புல எண்.8/2ல் 71 செண்ட், புல எண்.23/3Aல் 3.38 ஏக்கர், புல எண்.23/4A ல் 98செண்ட் ஆக மொத்தம் 7ஏக்கரா 74 செண்ட்டில் 2/3 பாகமான 5 ஏக்கர் 16 செண்ட் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 1967 ஆம் பி.வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம், நான்கு எல்லைகள் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 7 வரி ரசீது 22.03.2021ல் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பின்பு செலுத்தப்பட்ட வரி ரசீது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 7 வரி ரசீதில் கிராம நிர்வாக அலுவலர் முத்திரை இல்லை என்றால் சரிதான். ஆனால் கையெழுத்து உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் என கையால் எழுதப்பட்டுள்ளது.

6. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பி.வா.சா.ஆ 7 வரி ரசீது பொய்யாக என்னால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 1967ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ 1 ஆவணத்திற்கும் இவ்வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் தேவையற்று பி.வா.சா.ஆ 1 ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல்

செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. பட்டாவில் வாதி பாபு நாயுடு பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்டாதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதில் அந்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் நான் தவறு என்று சொல்லவில்லை. அவர் பெயர் இருக்கலாம். பாபு நாயுடுக்கு சொத்தில் உரிமையுள்ளது என்றால் அவர் தாயார் எழுதிக்கொடுத்து ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தில் பாபு நாயுடு கையெழுத்து செய்யவில்லை என்றால் அவர் அந்த சமயம் விமான படையில் பணி புரிந்து வந்தார். அவர் தாயார் தன் மகனிடம் தான் சொல்லி ஏற்பாடு செய்துதான் கையெழுத்து செய்வதாக என்னிடம் கையெழுத்து போடும்போது சொன்னார்.

8. அவர் தாயார் தன் மகனிடம் தான் சொல்லி ஏற்பாடு செய்துதான் கையெழுத்து செய்ததாக நான் தற்போது கூறும் விவரத்தை எனது எதிர் வழக்குரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த விவரமும் எனது எதிர் வழக்குரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)